தமிழ் இணையக் கல்விக்கழகம்
**TAMIL VIRTUAL ACADEMY**

மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)
**HG20 - நிலை II - (Grade II)**

நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 75

பகுதி - அ

**I** எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. உலக வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?
2. உலகில் வாழும் மக்களுக்கு இரண்டு கண்களாக வள்ளுவர் கூறுவன யாவை?
3. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?
4. திருநாவுக்கரசரைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றியவர் யார்?
5. வைக்கம் வீரர் என்று அழைக்கப் பெற்றவர் யார்?
6. மகத நாட்டை ஆண்டு வந்த மன்னன் பெயர் என்ன?
7. நம்நாட்டுக் கொடியின் நடுவில் அசோகச் சக்கரத்தை எதன் வடிவமாகப் பொறித்துள்ளனர்?
8. முல்லைக் கொடிக்குத் தன் தேரையே கொடுத்த வள்ளல் யார்?
9. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?
10. குறிஞ்சித் திணைக்குரிய நிலம் யாது?

பகுதி - ஆ

**II** எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. இராமலிங்க அடிகள் – சிறு குறிப்பு வரைக.
2. ‘நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி’ என்ற பழமொழியில் குறிக்கப்படும் அறநூல்கள் எவை?
3. இலக்குவன் இராமனிடம் குகனை எவ்வாறு அறிமுகம் செய்கின்றான்?
4. திருக்குற்றாலக் குறவஞ்சி எத்தனை பகுதிகளைக் கொண்டது? அவை யாவை?
5. பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.
6. அமுதபாரதி எழுதியுள்ள புதுக்கவிதையின் கருத்தை எழுதுக.
7. திரு.வி.கலியாண சுந்தரனார் பெரியாரை எவ்வாறு போற்றிக் கூறுகின்றார்?
8. பருத்தி மலரின் சிறப்பாக அமைச்சர் நலம்விரும்பி கூறியது யாது?
9. நம்நாட்டுக் கொடி எந்தெந்த நிகழ்ச்சிகளில் ஏற்றப்படுகின்றது?

10. ஏழடிப் பட்டம் என்று எதனை அழைத்தனர்? அதற்கான காரணம் யாது?
11. மலைவளம் காணச் சென்ற பாரி அரண்மனைக்குத் தனியாக நடந்து வருவதைக் கண்டு மக்கள் கூறியது என்ன?
12. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
13. பண்புப் பெயர்கள் எத்தனை வகைகளாய் அமைகின்றன? அவை யாவை?
14. பிறிதுமொழிதல் அணி என்றால் என்ன?
15. முல்லைத் திணைக்குரிய நிலமும் பொழுதும் யாவை?

## பகுதி - இ

**III** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. 'நாய் பெற்ற தெங்கம் பழமே' – இப்பழமொழி கொண்டு உணர்த்தப்படும் கருத்தினைக் கூறி விளக்குக.
2. குலசேகர ஆழ்வார் பாடியுள்ள பாடலின் கருத்தை எழுதுக.
3. எவை இன்பம் தருவன என்று கவிஞர் சுரதா கூறுகின்றார்?
4. இந்திய நாட்டுக் கொடிகளின் மூவண்ணங்களையும், அவை குறிக்கும் பண்புகளையும் கூறுக.
5. பாரியின் கொடை அளிக்கும் அருள் திறத்தைக் கபிலர் எவ்வாறு வியந்து பாடுகின்றார்?
6. மக்களை ஏற்றிச் செல்லும் பல்வகைத் தொடர்வண்டிகள் பற்றி எழுதுக.
7. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. தற்குறிப்பேற்ற அணியைச் சான்று காட்டி விளக்குக.

## பகுதி - ஈ

**IV** ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. திருக்குற்றால நாட்டின் வளத்தைத் திரிகூடராசப்பக் கவிராயர் எவ்வாறு விளக்கிப் பாடியுள்ளார்?
2. சித்தன்னவாசலில் உள்ள தாமரைக்குள ஓவியத்தின் சிறப்பினை விவரிக்க.
3. இரட்டுற மொழிதல் அணியின் இலக்கணத்தைச் சான்றுப் பாடல் காட்டி விளக்குக.

## பகுதி - உ

**V** ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.
**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. கல்வி என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. தந்தை பெரியாரின் சமுதாயத் தொண்டுகளை விவரிக்க.